# சிக்கலான கல்லீரல் அறுவைச் சிகிச்சைகள்

## மியாட் மருத்துவமனை சாதனை

சென்னை

விருதாச்சலத்தைச் சேர்ந்த வெங்கடேசன் என்பவருக்கு கல்லீரல் பகுதியில் கட்டி இருந்தது. அதைத் தொடர்ந்து அவர் சென்னை மியாட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி மருத்துவர் பாரி கூறுகையில் "அறுவை சிகிச்சை செய்யும் போது கல்லீரலின் வலது பக்கத்துக்கு வரும் ரத்த ஓட்டத்தை சிறிது நேரம் நிறுத்தி வைத்து அப்பகுதியில் இருந்த 2.6 கிலோ எடையுள்ள கட்டியை நீக்கினோம்" என்றார்.

இதுபோல் சென்னையைச் சேர்ந்த வெங்கடேஸ்வரன் என்பவருக்கு கல்லீரல் பகுதியில் ஏற்பட்ட கட்டி பெருங்குடல், சிறுநீரகம், மண்ணீரல் என பல பகுதிகளிலும் பரவி இருந்தது. இவரது சிறுநீரகத்தை மட்டும் தனியாக எடுத்து வெளியே வைத்து விட்டு மற்ற பகுதிகளில் இருந்த கட்டிகள் அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்பட்டது. பிறகு மீண்டும் சிறுநீரகம் அதனுடைய இடத்தில் பொருத்தப்பட்டது.




மியாட் மருத்துவமனையில் சிக்கலான கல்லீரல் அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றப்பட்டவர்களுடன் (இடமிருந்து) மருத்துவமனை நிர்வாக இயக்குநர் பி.வி.ஏ.மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் சுரேந்திரன். படம்: எஸ்.எஸ்.குமார்

கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஆறுமுகம் என்பவருக்கு கட்டி மிகவும் பெரிய அளவில் பரவி இருந்ததால் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குத் தகுதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, முதலில் புற்றுநோய் ஏற்பட்ட இடத்தில் மட்டும் கதிரியக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது கதிரியக்கத்தால் மற்ற பகுதிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்பட்டது. புற்றுநோய்க் கட்டி சிறிய அளவில் குறைந்த பிறகு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இத்தகைய கட்டிகள் உருவாவது பற்றி 'தி இந்து'விடம் கூறிய துறைத் தலைவர் மருத்துவர் சுரேந்திரன், "கல்லீரலில் கட்டி ஏற்படுவதற்கான காரணங்களை நம்மால் முன் வைக்க முடியாது. அதுபற்றி ஆய்வுகள் நடந்து வருகின்றன. மேலைநாடுகளில் கல்லீரல் இழைநார் வளர்ச்சி (சிரோஸிஸ்) உள்ளவர்கள் ஆறுமாதத்துக்கு ஒருமுறை 'அல்ட்ரா சவுண்ட்' மூலம் தங்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அப்போது கட்டி இருப்பது தெரிய வந்தால் ஆரம்பக் கட்டத்திலேயே அதனை குணப்படுத்திவிட முடியும். ஆனால் இந்தியாவில் அதுபோன்ற நிலைமைகள் இல்லை" என்றார்.